**அம்பன்கங்ககோரளை பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பன்கங்க கோரளை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சிரங்கஹவத்த நீர் விநியோகத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 464,577 செலவழிக்கப்பட்டுள்ள போதிலும் ரூபா 396,000 மே கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கிடப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரணையை ஏற்றுக் கொள்வதோடு 2019.12.31 திகதி வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கில் ரூபா 136,947 பெறுமதியான டயர்களும், டியூப்களும், வாகன பேட்டரிகளும் கணக்கிடப்பட்டபோது அசையாத சொத்துக்கள் கணக்கில் இந்தத் தொகையை விட அதிகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கு சரி செய்யப்படல் வேண்டும். | கணக்காய்வு விசாரணையை ஏற்றுக் கொள்வதோடு 2019.12.31 திகதி வருடத்தின் இறுதிக் கணக்கில் அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.2 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான அத்தாட்சிகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 3,530,691 பெறுமதியான 13 கணக்குகளுக்குரிய சான்றுகள் முன்வைக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சரி பார்க்க முடியவில்லை. | நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன் வைக்கப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரணையுடன் உடன்படுவதோடு, விசாரணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் 13 கணக்குகளுக்குரிய விபரங்களை அலுவலகத்தில் கண்டுபிடிக்க முடியாதுள்ளமையால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க இயலாதுள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதி எண் 217 | அனைத்து காணிகளையும் கட்டிடங்களையும் குறித்த ஆவணமொன்று பேணப்படவில்லை. | விதியின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் சம்பந்தமான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 803,539 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,541,806 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமானம் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப ட்ட வருமானம் | 2017 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 101,000 | 12,005 | 10,258 | 50,638 | - | - | - | - |
| (ii) | வாடகை | 147,000 | 96,600 | 105,030 | 16,160 | 13,000 | 96,600 | 90,655 | 24,590 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 335,100 | 294,016 | 294,016 | - | 36,000 | 298,600 | 298,600 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,926,732 | 3,276,844 | 3,276,844 | - | 471,600 | - | 2,128,520 | - |
| | மொத்தம் | 5,509,832 | 3,679,465 | 3,686,148 | 66,798 | 520,600 | 395,200 | 2,517,775 | 24,590 |

### 2.2.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரை ரூபா 50,638 நிலுவைத் தொகை காணப்பட்டதோடு, 61 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 5 வருடங்களைக் கடந்த ரூபா 30,720 நிலுவைத் தொகை காணப்பட்டது. | நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

### 2.2.3 நீர் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பராமரிக்கப்படும் நீர் விநியோகத் திட்டங்கள் 8 இற்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான நீர்க் கட்டண நிலுவை வருமானம் ரூபா 423,363 ஆக இருப்பதோடு அதனுள் நீர்ப் | இப்போதும் நிலுவையிலிருக்கும் தொகைகள் அறவிடப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 வரை நிலுவையிலிருக்கும் ரூபா 423,363 நீர் கட்டண நிலுவைத் தொகையில் ரூபா 23,578 இது வரை அறவிடப்பட்டுள்ளது. |

பாவனையாளர்கள் 15 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 5 வருடங்களைக் கடந்த ரூபா 18,355 தொகையும் காணப்பட்டது.

### 2.2.4 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 159,750 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,554,150 ஆகவும் இருந்தன. | நிலுவையிலிருக்கும் முத்திரைக் கட்டணங்களும் நீதிமன்ற தண்டப் பணங்களும் அறவிடப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டி நிலுவையிலிருக்கும் நீதிமன்ற தண்டப் பணத் தொகை ரூபா 151,750 என்பதோடு அதில் ரூபா 99,750 தற்போது அறவிடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் நிலுவையிலுள்ள முத்திரைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 1,457,900 ஆகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) பணிகளை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் மாகாண உள்ளூராட்சி பாதை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூபா 100,000 ஒதுக்கப்பட்டிருந்த புஸ்ஸெல்ல பிரிவின் ராஜமலையிலிருந்து மேல் அஸ்வெத்த பாதையை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் செயற்படுத்தப்படாமல் கை விடப்பட்டிருந்தது. | அபிவிருத்தித் திட்டங்கள் ஒழுங்கான முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு இறுதி வரைக்கும் அந்த வேலையை முடிக்காத காரணத்தால் அவ் வேலைத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய இயலாமல் போனதை ஏற்றுக் கொள்கிறேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் குறித்து சபையானது முறையாக அறிவுறுத்தாதிருந்த காரணத்தால் அதற்கான நீண்ட கால செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி இலக்குகள் தயாரிக்கப்பட்டு அவற்றை அடையத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அபிவிருத்தி அதிகாரி பதவிகள் 4 மற்றும் முன் பள்ளி ஆசிரியர் பதவிகள் 2 ஆகியன நீண்ட காலமாக வெற்றிடங்களாகக் காணப்பட்டதோடு ஆரம்ப நிலை பதவிகள் 6 வெற்றிடங்களாகக் காணப்பட்டன. | வெற்றிடங்களாகவுள்ள பதவிகள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்களாகவுள்ள அலுவலக பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ள விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப் பரீட்சை நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. |

**3.3 செயற்பாட்டு வினைதிறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் சபையினால் பராமரிக்கப்படும் 8 நீர் விநியோகத் திட்டங்களில் குடிநீர் பாவனை பரிசோதனை செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குடிநீர் பாவனை பரிசோதனை செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வேலி எல்லைகள் உறுதியாகத் தெரியாத மற்றும் உரிமை கோரப்படாத சபைக்குரிய காணிகள் 11 ஐ அளவிட நடவடிக்கை எடுத்து வரைபடப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு எல்லை வேலிகள் கட்டப்பட்டு காணிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அரசாங்கத்தின் நில அளவைத் திணைக்களம் மூலமாக சபைக்குரிய இடங்கள் அளக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) சபைக்குரிய கை ட்ராக்டர் வண்டியினதும் மஹேந்திரா கெப் ரக வாகனத்தினதும் பதிவுப் புத்தகங்கள் காணப்படாமையால் பல வருடங்களாக வருமான வரி அறவிடப்படா திருந்ததோடு, வருடாந்த காப்புறுதியும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு மேலதிக வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரணையோடு உடன்படுவதோடு சம்பந்தப்பட்ட வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

**3.4.2 கையேற்கப்படுத்தப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டில் மத்திய மாகாண சபையினால் வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை சபையின் பெயருக்கு மாற்றி கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிமை கையகப்படுத்தப்பட வேண்டும். | 2007 ஆம் ஆண்டு சபைக்கு வழங்கப்பட்டிருந்த CPTX-6009 எனும் இலக்கத் தகடுடைய மோட்டார் சைக்கிளைக் கையகப்படுத்திக் கொள்ளத் தேவையான விண்ணப்பங்கள் மத்திய மாகாண தலைமைச் செயலாளரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. |

### 3.4.3 செயலற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 5 பாவிக்கப்படாமலேயே சேதமடைய விடப்பட்டிருந்தன. | அப்புறப்படுத்த வேண்டிய சொத்துக்கள் அகற்றப்பட வேண்டும். | வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்காக விலை மதிப்பீட்டை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து. பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) பயன்படுத்தக் கூடிய நிலையில் டிபர் வண்டியொன்றும், டம்ப் ட்ரக் வண்டியொன்றும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதோடு, மஹேந்திரா கெப் ரக வாகனமொன்று 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்திலிருந்து இயந்திரக் கோளாறு காரணமாக பயன்பாட்டிலிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. | சபைக்குரிய வாகனங்கள் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்படவும், பழுது பார்க்கப்பட வேண்டிய வாகனங்கள் பழுது பார்க்கப்படவும் வேண்டும். | சாரதிகள் இல்லாத காரணத்தால் டிபர் வண்டியும் டம் ட்ரக் வண்டியும் அதிகளவில் பயன்படுத்தப்படாத போதும் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. செயலிழந்து போயுள்ள மஹேந்திரா கெப் ரக வாகனத்தைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.5 கொள்வனவு

#### 3.5.1 கொள்வனவுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொள்வனவு வழிகாட்டுதல் கையேட்டின் 4.2.1 இணங்க கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவுத் திட்டம் புதுப்பிக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு விசாரணையோடு உடன்படுவதோடு கொள்வனவுத் திட்டமொன்றைத் தயாரிக்கத் தேவையான பயிற்றப்பட்ட அதிகாரியொருவர் இல்லாத காரணத்தால் இந்தத் தவறு நேர்ந்துள்ளது. |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஒரு கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு மாத்திரமே நடைபெற்றிருந்தது. | உரிமை கையகப்படுத்தப்பட வேண்டும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுக்கிணங்க கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |